மேட்டூர் அணை நீர்மட்டம் 74.73 அடி

First Published : 25 May 2010 05:40:32 AM IST


சேலம், மே 24: மேட்டூர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 74.73 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 3,687 கனஅடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,222 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணை நீர் இருப்பு 36.90 டி.எம்.சி.

**ரூ.12 கோடி தேயிலைத் தூள் தேக்கம்: நெருக்கடியில் கூட்டுறவு தேயிலை ஆலைகள்!**

டி.வீ.ஆர்.சாமி

First Published : 26 May 2010 03:25:38 AM IST

Last Updated : 26 May 2010 05:59:23 AM IST



மஞ்சூர் : கூட்டுறவு ஆலைகளின் தேயிலைத் தூள் ரூ.12 கோடி அளவிற்கு தேக்கமடைந்திருப்பதால் கூட்டுறவு தேயிலை ஆலைகள் கடும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளன. இதனால் அங்கத்தினர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயத்தை நம்பி 75 சதவீத மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தேயிலை உற்பத்தியில் நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் ஆலைகளும்,15 கூட்டுறவு ஆலைகளும் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவு ஆலைகளில் அங்கத்தினர்கள் மட்டுமே பசுந்தேயிலையை விநியோகிக்க முடியும் என்பதால் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு மற்றும் குறு தேயிலை விவசாயிகள் அங்கத்தினர்களாக சேர்ந்து பசுந்தேயிலை விநியோகம் செய்து வருகின்றனர்.

கூட்டுறவு ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத்தூள் குன்னூருக்கு கொண்டு செல்லப்பட்டு இண்ட்கோ சர்வ் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு, வாரம் இரண்டு முறை ஏல மையத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. மாதம் முழுவதும் ஏலத்தில் விற்பனையாகும் தேயிலையின் விலையைக் கணக்கில் கொண்டு நிர்வாகச் செலவினங்களை கழித்து அங்கத்தினர்களுக்கு விலையாக வழங்கப்படுகிறது.

தனியார் ஏல மையங்களில் கூட்டுறவு ஆலைகளின் தேயிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாததாலும், இடைத்தரகர்களின் தலையீட்டாலும் உரிய விலை
கிடைப்பதில்லை என்ற புகார்கள் எழுந்ததால், 6 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகளின் நலன் கருதி இண்ட்கோ சர்வ் மூலம் கணினி ஏல மையம் திறக்கப்பட்டது. இதில் கூட்டுறவு ஆலைகளின் தேயிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாலும், இடைத் தரகர்கள் தலையீடு தவிர்க்கப்பட்டதாலும் தேயிலைக்கு உரிய விலை கிடைத்து வந்தது.

இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் இறுதியுடன் கணினி ஏல மையம் முன்னறிவிப்பின்றி மூடப்பட்டது. இதனால் கூட்டுறவு ஆலைகளின் தேயிலைத் தூள் ஏப்ரல் மாதம் முதல் தனியார் ஏல மையத்திற்கு விற்பனைக்காகக் கொண்டு செல்லப்படுகிறது. ஆனால் அங்கு கூட்டுறவு ஆலைகளின் தேயிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாததால் விற்பனையில் பெரும் மந்த நிலையே நீடித்து வருகிறது. ஒவ்வொரு முறையும் கூட்டுறவு ஆலைகளின் தேயிலை 20 சதவீதத்திற்கும் குறைவான விலைக்கே கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் தேயிலைக்கு உரிய விலை கிடைக்காமல் போவதுடன் ஒவ்வொரு முறையும் 80 சதவீத தேயிலைத் தூள் தேக்கம் அடைந்து வருகிறது. இதனால் இண்ட்கோசர்வ் கிடங்குகளில் தேயிலைத் தூளை இருப்பு வைக்க இடம் இல்லாமல் தனியார் கிடங்குகளிலும் இண்ட்கோ தேயிலை இருப்பு வைக்கப்படுகிறது.

இதே நிலை நீடிப்பதால் விற்பனைக்கு கொண்டு செல்லப்படும் கூட்டுறவு தேயிலை கிடங்குகள் கிடைக்காமல் வாரக் கணக்கில் லாரிகளிலேயே வைக்கப்படுகிறது. இதனால் கிடங்குகள் வாடகை மற்றும் வாரக் கணக்கில் நிறுத்தப்படும் லாரிகளுக்கு வாடகை மட்டும் பல லட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது.

தேயிலை விற்பனையாகாத நிலையில், இருப்பு வைப்பதற்காக மட்டும் பல லட்சம் ரூபாய் செலவிடப்படுவதுடன், விவசாயிகள் விநியோகித்த பசுந்தேயிலைக்கு விலை கொடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருப்பதால், கூட்டுறவு ஆலைகளில் வங்கிகளிலிருந்து வட்டிக்குக் கடன் வாங்கி நிலைமையைச் சமாளித்து வருகின்றனர்.

தேயிலை தேக்கம், கிடங்கு வாடகை, லாரி வாடகை, வங்கி வட்டி, நிர்வாக செலவினங்களை கழித்து அங்கத்தினர்களுக்கு விலை கொடுக்கப்படுவதால் ஒட்டு மொத்த செலவினங்களும் அங்கத்தினர்கள் தலையிலேயே சுமத்தப்படுகிறது. இதனால் பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்காமல் அங்கத்தினர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

ஏப்ரல் மாதம் முதல் இதே நிலை தொடர்வதால், இந்த மாதத்திற்கான செலவினங்களுக்கு கடன் பெற முடியாமலும், ஏற்கெனவே வாங்கிய கடனுக்கு வட்டிகூட கட்டமுடியாத நெருக்கடி நிலைக்கு கூட்டுறவுத் தேயிலை ஆலைகள் தள்ளப்பட்டுள்ளன. இந்த நெருக்கடி நிலைக்கு விரைவில் தீர்வு காண பல கோடி ரூபாய் மதிப்பில் தேங்கி கிடக்கும் கூட்டுறவு ஆலைகளின் தேயிலையை விற்பனை செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேயிலை விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நிலநீர் செறிவூட்டும் விருது: ஜூன் 15-க்குள் விண்ணப்பிக்க வேண்டுகோள்**

First Published : 25 May 2010 03:46:13 AM IST

திருநெல்வேலி, மே 24: திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் நிலநீர் செறிவூட்டும் விருது பெற, ஜூன் 15 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் மு. ஜெயராமன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: நிலநீர் சேமிப்பை ஊக்குவிப்பதற்கு மத்திய நீர்வளத் துறை நிலநீர் செறிவூட்டும் விருது, தேசிய நீர்வள விருது ஆகிய விருதுகள் வழங்க தீர்மானித்துள்ளது.

அதன்படி இந்த விருதுகளுக்கு, திருநெல்வேலி மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு மற்றும் செயற்கை முறையில் நில நீரை சிறப்பாக சேகரிக்கும் நிறுவனங்களிடமிருந்தும், உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற் கப்படுகின்றன.

இதற்கு அரசு சாரா நிறுவனங்கள், கிராம ஊராட்சிகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், விவசாய மேம்பாட்டு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தனி நபர்கள், பயிற்சி நிறுவனங்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். தகுதியுடைய நபர்கள், தகுந்த ஆதாரங்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (வளர்ச்சிப் பிரிவு), திருநெல்வேலி- 9 என்ற முகவரிக்கு ஜூன் 15-க்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்றார் ஜெயராமன்.

# தினமலர்

**மே 27ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்: கலெக்டர் அறிவிப்பு**

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 27ம் தேதி நடக்கிறது' என மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 27ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட கலெக்டர் விஜயகுமார் தலைமையில் நடக்கிறது.

விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது விவசாய பணிகள் தொடர்பான பாசன ஏரி, வாய்க்கால்கள் தூர்வாருதல், வங்கி கடனுதவி, உரம், வேளாண்மை இயந்திரங்கள், விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும்.

எனவே, இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு குறைகளை தெரிவித்து பயன் பெறலாம். கூட்டத்தில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளனர். எனவே பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சூறாவளியால் வாழைப்பயிர் பாதிப்பு : விவசாயிகளிடம் விபரம் சேகரிப்பு**

ஆலங்குடி: புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி பகுதியில் பலத்த காற்று மழையால் 300 ஏக்கரில் பயிரிடப்பட்டதை வாழை, மக்காச்சோளம் சாய்ந்து விட்டது. பாதிப்பு குறித்த விவரங்களை அந்தந்தப் பகுதி வி.ஏ.ஓ.,க்கள் விவசாயிகளிடம் விபரங்கள் சேகரித்து வருகின்றனர்.

ஆலங்குடி, வடகாடு, கீழாத்தூர், மாங்காடு, கொத்தமங்கலம், சூரன் விடுதி, புள்ளான் விடுதி, நெடுவாசல் இன்ன பிற பகுதிகளில் 300 ஏக்கரில் பயிரிட்டப்பட்டிருந்த மக்காச்சோளம் நவீன வேளாண் தொழில்நுட்பம் மூலம் ஏக்கருக்கு 40 முதல் 50 குவிண்டால் விளைச்சல் கிடைக்கிறது. வெளி மாநிலம், வெளி நாட்டிற்கும் விற்பனை செய்யப்படுகிறது. மக்கசோளம் குவிண்டால் ஒன்றுக்கு 850 ரூபாய் வரை விலை போகின்றது. குறைந்த முதலீட்டில் நல்ல விளைச்சல் ஏற்பட்டிருந்த மக்காசோளம் பயிர்கள் பலத்த காற்றால் அடியோடு ஒடிந்து சாய்ந்து விட்டது. இதேபோல, ரஸ்தாரி, பூவன், செவ்வாழை, கறிவாழை போன்ற பல ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் அடியோடு சாய்ந்துவிட்டது. இதனால் வாழை, சோளம், பயிரிட்டிருந்த விவசாயிகள் பல லட்சம் ரூபாய் இழப்பீடு ஏற்பட்டு பல விவசாயிகள் சோகத்தில் உள்ளனர். "பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசு போதிய நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டும்' என்பதே விவசாயிகளின் கோரிக்கை ஆகும்.

**கம்பு அறுவடை தீவிரம்; விலையும் உயர்வு**

கோபிசெட்டிபாளையம்: : கோபி வட்டாரத்தில் கம்பு அறுவடை இறுதி கட்டத்தை எட்டியுள்ளது. சென்றாண்டை விட அதிக விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கோபியில் சென்றாண்டு இரண்டாம்போக நெல் அறுவடை முடிந்த வயல்களில், குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படும் தானியப் பயிரான கம்பை விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டனர். தற்போது கோபி, குள்ளம்பாளையம், நாதிப்பாளையம், சிறுவலூர், கடுக்காம்பாளையம், கொறவம்பாளையம் உள்ளிட்ட பகுதியில் மூன்று மாதப் பயிரான கம்பு அறுவடை மும்முரமாக நடந்து வருகிறது. அறுவடை செய்த கம்பு தானியத்தை கோடை வெயிலில் விவசாயிகள் காயவைத்து வருகின்றனர். கோடை காலத்தில் உடலுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்த கூடிய கம்புக்கு நல்ல கிராக்கியும் உள்ளது. அரிசி, கோதுமை, கேழ்வரகு ஆகிய தானியங்களை விட கம்பில் உடலுக்கு ஏற்ற சத்துக்கள் சமவிகிதத்தில் உள்ளன. குழந்தைகளுக்காக பிரத்தியேகமாக தயார் செய்யப்படும் உணவுப் பொருட்களில் கம்புக்கு கட்டாயம் இடமுண்டு. குளிர்ச்சியான எளிதில் ஜீரணமாகக் கூடிய கம்பு தானியத்தை முதியவர்களும் அதிகளவில் உணவாக பயன்படுத்தி வருகின்றனர். கடந்த சீஸனில் ஒரு கிலோ கம்பு எட்டு ரூபாய்க்கு விற்றது. கோடை வெயில் கடுமையாக இருந்ததால் தற்போது 10 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. கடந்த சீஸனை விட தற்போது இரண்டு ரூபாய் வரை கூடுதலாக கிடைக்கிறது. இதனால், நல்ல விலை கிடைக்கும்போதே சாகுபடி செய்யப்பட்ட கம்புவை அறுவடை செய்து விற்பனை செய்யும் எண்ணத்தில், விவசாயிகள் முழுமூச்சுடன் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**பாசன கால்வாய்களில் முறிந்து விழுந்த மரங்கள் கடைமடைக்கு நீர் செல்வது பாதிப்பு**

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் பெய்த கனமழையால் அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதால் நீரோட்டம் பாதித்துள்ளது. கொடிவேரி பழைய பாசனப் பகுதிகளில் உள்ள 24 ஆயிரம் ஏக்கரில் முதல் போக சாகுபடிக்காக கடந்த மாதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அரக்கன்கோட்டை வாய்க்காலில் 32 கிலோ மீட்டர் வரையிலும், தடப்பள்ளி வாய்க்காலில் 77 கிலோ மீட்டர் வரையிலும் தண்ணீர் சென்று அனந்தசாகரம் ஏரியில் முடிகிறது. தற்போது அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியில் நெல் நாற்று நடுதல், கரும்பு மற்றும் மஞ்சள் சாகுபடி பணி விறுவிறுப்பாக துவங்கியுள்ளது. வெளி மாவட்டத்தில் இருந்து நூற்றுக்கணக்கான விவசாயிகள் கோபியில் குவிந்த வண்ணம் உள்ளனர்.
"லைலா' புயலால் கோபி சுற்று வட்டாரப் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்றுடன் கூடிய மழை பெய்தது. அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால் ஓரத்தில் இருந்த மரங்கள் வேரோடு சாய்ந்து வாய்க்காலுக்குள் விழுந்தன. இதனால் தண்ணீர் வேகம் தடைபட்டுள்ளது. ஏற்கனவே வெட்டப்பட்ட வாழை மரங்களை சில விவசாயிகள் வாய்க்காலில் போட்டு விடுவதால், கடைமடை பகுதிக்கு போதிய அளவில் தண்ணீர் செல்லவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. தற்போது வாய்க்காலில் விழுந்துள்ள மரங்களால் கடைமடை பகுதிக்கு தண்ணீர் செல்வது மேலும் பாதிக்கப்பட்டுள்ளது. வாய்க்கால்களில் ஆகாயத் தாமரைகள் முழுமையாக அகற்றப்படாததால் தண்ணீர் வாய்க்காலில் தேங்கி நிற்கிறது. குறிப்பாக கூகலூர் கிளை வாய்க்காலில் அதிகளவில் ஆகாயத் தாமரை படர்ந்துள்ளது. கோபி வட்டாரத்தில் மூன்று தினங்களாக மழை பெய்து வருகிறது. இதனால் பவானிசாகர் அணையில் இருந்து ஆற்றில் தண்ணீர் திறப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், வாய்க்காலில் குறைந்தளவே தண்ணீர் செல்கிறது. வாய்க்காலில் ஏற்பட்டுள்ள தடைகள் நீரோட்டத்தை முற்றிலும் நிறுத்தியுள்ளது. கடைமடை பகுதியில் விவசாயப் பணிகளை தடையில்லாமல் மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. "வாய்க்காலில் விழுந்துள்ள மரங்கள் மற்றும் விளைந்துள்ள ஆகாய தாமரைகளை பொதுப்பணி துறையினர் உடனடியாக அகற்ற வேண்டும்' என விவசாயிகள் கோரியுள்ளனர்

**2010 - 11ம் ஆண்டுக்கான கரும்பு சாகுபடி பதிவு செய்ய சர்க்கரை ஆலை அழைப்பு**

தஞ்சாவூர்: தஞ்சை அடுத்த குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கோட்ட கரும்பு விவசாயிகள் கிராமக்கூட்டம் தங்கப்பஉடையான்பட்டியில் நடந்தது. கரும்பு அலுவலர் பாண்டியன் வரவேற்றார். தலைமை கரும்பு அலுவலர் குணசேகரன் பேசியதாவது: 2009 - 10ம் ஆண்டு அரவை பருவத்தில் மூன்று லட்சத்து 45 ஆயிரத்து 940 டன் அரவை செய்து 9.38 சதவீத சர்க்கரை கட்டுமானம் ஆலை பெற்றுள்ளது.

கரும்பு சாகுபடியில் அகல பார், சொட்டு நீர் பாசனம், உர நிர்வாகம், உயிர் உர நிர்வாகம், துல்லிய பண்ணை திட்டம் போன்ற தொழில் நுட்பங்களை பயன்படுத்தினால் கூடுதல் லாபமும், மகசூலும் பெறலாம். மின் உற்பத்தி செய்ய இணை மின் நிலையம் தமிழக மின்வாரியம் மூலம் அமைக்கப்பட உள்ளது. எதிர்காலத்தில் எத்தனால் மற்றும் எரி சாராயம் போன்ற திட்டங்கள் வர உள்ளது. என வே, இதற்கான மூலப்பொருளா ன கரும்பு அவசியம் என்பதை விவசாயிகள் உணர வேண்டும்.

2010 - 11ம் அரவை பருவத்துக்கு தமி ழக அரசு டன் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் கரும்பு விலை அறிவித்துள்ளது. எனவே, அதிகமான கரும்பு பயிரிட்டு ஆலைக்கு பதிவு செய்து பலன்களை பெற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். கரும்பு விவசாயிகள் சங்க தலைவர் ராமசாமி, சிவானந்தம், செந்தில், பழனிசாமி, சுந்தர்ராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.

**மண் வள அட்டை பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

ராசிபுரம்: " மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்து, மண்வள அட்டை பெற்று, அதிகாரிகள் ஆலோசனைப்படி உரமிட்டால் அதிக மகசூல் பெறலாம்' என, எலச்சிபாளையம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் லோகநாதபிரகாசம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விவசாயிகளின் நலன் மண்ணின் வளத்தை பொறுத்தே அமைகிறது. பயிர் சாகுபடி செய்வதால் ஏற்படும் சத்து குறைபாடுகளை சரியான உர நிர்வாகத்தின் மூலம் சரி செய்ய வேண்டியது அவசியம். சரியான உர நிர்வாகத்துக்கு முதலில் மண் பரிசோதனையே அடிப்படையாகும். சத்துக்களின் அளவு வேறுபடுவதாலும், சத்துகளின் தேவை மாறுபடுவதாலும் மண் பரிசோதனையின் மூலமே பயிருக்கு ஏற்ப சரியான உர சிபாரிசு வழங்க முடியும். அதன் மூலம் தேவையான அளவு மட்டுமே உரமிடுவதால் குறைந்த செலவில் கூடுதல் மகசூல் பெறவதோடு அதிகப்படியான உரச்செலவையும் குறைக்கலாம். மண்ணின் தன்மைகளை அறியவும், களர், உவர் மற்றும் அமில நிலங்களை சீர்திருத்தவும் பயிருக்கு கிடைக்க வேண்டிய சத்துகளின் அளவை அறிந்து அதற்கேற்ப உரமிடவும் மண் பரிசோதனை மிகவும் அவசியமாகிறது.

ஆண்டுக்கு ஒரு முறை மண் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்ய வேண்டும். ஒரு மாதிரி தழை, மணி, சாம்பல்சத்து ஆய்வு செய்வதற்கு ஐந்து ரூபாய், நுண்ணூட்டசத்து ஆய்வு செய்ய ஐந்து ரூபாய் செலுத்த வேண்டும். பயிர் அறுவடை முடிந்த பின் அடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்வதற்கு முன்னும் உரமிட்ட மூன்று மாதத்துக்கு பிறகும் மண் மாதிரி எடுக்க வேண்டும். நெல், சோளம், பயறுவகைகள், எண்ணெய் வித்துகள் போன்ற பயிர்கள் சாகுபடி செய்ய அந்நிலத்தில் 15 செ.மீ., ஆழத்திலும், கரும்பு, வாழை, போன்ற பயிர்கள் சாகுபடி செய்ய 30 செ.மீ., ஆழத்திலும், பழந்தோட்ட பயிர்களாக இருந்தால் 3 அடி ஆழத்திலும் மேல் மண்ணை தவிர்த்து விடமால் "வி' வடிவில் வெட்டி சரிவு மண்ணை அப்புறப்படுத்திய பின் "வி' வடிவில் மேல் இருந்து மண்ணை சுரண்டி எடுத்தல் வேண்டும். ஒரு வயலில் சுமார் 10 முதல் 12 இடங்களில் எடுத்து நன்கு கலக்கி குவாட்டரிங் முறையில் அரை கிலோ வரும்படி ஒரு துணிப்பையில் எடுத்து கொள்ள வேண்டும். சேகரித்த மண் மாதிரிகளை தனித்தனியாக கட்டி சுத்தமான துணிப்பைகளிலோ அல்லது பாலித்தீன் பைகளிலோ போட்டு உரிய அடையாளமிட்டு, விவசாயின் பெயர் மற்றும் முகவரி, நிலத்தின் பெயர்/சர்வே எண்/ அடையாளம், வட்டாரத்தின் பெயர், உர சிபாரிசு கோரப்படும் பயிர், பாசன நீரின் தன்மை, முன் சாகுபடி செய்த பயிர் போன்ற விபரங்களுடன் மண்பரிசோதனை நிலையத்திற்கு அனுப்ப வேண்டும். விவசாயிகள் சரியான தருணத்தில்

மண் மாதிரி எடுத்து அனுப்பி மண்வள அட்டை பெற்று, அதன் பரிந்துரைப்படி உரமிட்டு அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**காய்கறி விலை கடும் உயர்வு! ஏழை, நடுத்தர மக்கள் பரிதவிப்பு ஜூனில் மேலும் "எகிற' வாய்ப்பு**

கோவையில் காய்கறிகளின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் ஏழை, நடுத்தர மக்கள் வாங்க முடியாமல் பரிதவிக்கின்றனர். நான்கு உறுப்பினரை கொண்ட சராசரி குடும்பத்தினர் கூட குழம்பு, கூட்டு, ரசத்துக்கு மட்டுமே மாதம் தோறும் 1,000 ரூபாய் செலவிட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருப்பதாக புலம்புகின்றனர், இல்லத்தரசிகள். கோவை நகரிலுள்ள தியாகி குமரன் மார்க்கெட் மற்றும் கவுண்டம்பாளையம் மார்க்கெட்கள், காய்கறி மொத்த விற்பனையில் முதன்மையானவை. வெளிமாநிலங்கள், வெளிமாவட்டங்களில் இருந்தும், கோவை புறநகர் பகுதிகளில் இருந்தும் கொண்டுவரப்படும் காய்கறிகள் மார்க்கெட்களில் இருப்பு வைக்கப்பட்டு, வியாபாரிகளுக்கு மொத்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது; அதன்பின், கடைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சில்லறை முறையில் விற்கப்படுகிறது.

கடந்த இரு ஆண்டுகளாகவே காய்கறி விலை, கட்டுப்பாடின்றி எகிறிக்கொண்டே போகிறது. இதனால் ஏழை, நடுத்தர மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி தவிக்கின்றனர். நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு தேவையான காய்கறிகளை வாங்க மட்டுமே மாதம் தோறும் 1,000 ரூபாய் வரை செலவாகிறது. குழம்பு, கூட்டு, ரசம் வைக்க, ஏதாவது இரு வகை காய்கறிகளை அரை கிலோ வாங்கினாலே 18 ரூபாய் வரை "பழுத்து' விடுகிறது. அதன் பின், தேங் காய், சின்னவெங்காயம், பெரியவெங்காயம், கறிவேப்பிலை என "சைடு வகைகளுக்கு' மட்டுமே தினமும் 12 ரூபாய்க்கும் அதிகமாக செலவாகிறது. இப்படி, ஒரு நாளுக்கு தேவையான குழம்பு, கூட்டு, ரசம் வைக்கவே 30 ரூபாய்க்கும் அதிகமாக செலவானால் என்ன செய்வது? என புலம்புகின்றனர், இல்லத்தரசிகள். கேரட், பீன்ஸ், பூசணி, முருங்கை, வெண்டை, புடலை, தக்காளி, முட்டைகோஸ், பீட்ரூட், உருளைக்கிழங்கு என, பெரும்பாலான காய்கறிகளின் விலையும் ஏறுமுகத்திலேயே உள்ளன. இதில், தக்காளி முதலிடம் வகிக்கிறது.

கடந்த வாரம் மொத்த காய்கறி மார்க்கெட்டில் கிலோ 14 -16 ரூபாயாக இருந்த தக்காளி விலை, இந்தவாரம் 25-30 ரூபாயாக எகிறியுள்ளது; காரணம், உள்ளூர் வரத்து குறைவு. கடும் வெயிலாலு<ம், தண்ணீர் பற்றாக்குறையாலும் விவசாய நிலங்களிலேயே தக்காளி செடிகள் கருகி, காய்ப்பும் குறைந்துவிட்டது. பெங்களூரு மற்றும் ராயக்கோட்டையில் இருந்து மட்டுமே அதிக அளவிலான தக்காளி மார்க்கெட்களுக்கு வருகிறது; இதனால், விலை எகிறியுள்ளது.

கடந்த வாரம் கிலோ 10 ரூபாய்க்கு விற்பனையான காலிபிளவர் 25 ரூபாயாகவும், 10 ரூபாய்க்கு விற்ற முட்டைக்கோஸ் 15 ரூபாயாகவும், 20 ரூபாய்க்கு விற்கப்பட்ட மல்லித்தழை 120 ரூபாயாகவும், எட்டு ரூபாயாக இருந்த உருளைக்கிழங்கு 16 ரூபாயாகவும் அதிகரித்துள்ளது. மார்க்கெட்டில் கிலோ 30 ரூபாயக்கு விற்கப்படும் முருங்கைக்காய், கடைகளில் சில்லறை முறையில் ஒரு காய் மூன்று ரூபாய் முதல் நான்கு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே போன்று, மார்க்கெட்டில் கிலோ 30 ரூபாய்க்கு வியாபாரிகளால் வாங்கப்படும் பீன்ஸ், கடைகளில் கிலோ 36 ரூபாய் வரை விற்கப்படுகிறது. காய்கறிகளின் கிடுகிடு விலை உயர்வு காரணமாக மக்கள் மத்தியில், குறிப்பாக பெண்கள் மத்தியில் கடும் அதிருப்தி நிலவுகிறது. காய்கறிகளின் விலையை கட்டுப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்வது அவசியம்.

காய்கறி விலையேற்றத்துக்கான காரணம் குறித்து, கோவை தியாகி குமரன் மார்க்கெட் வியாபாரிகள் சங்க துணைத்தலைவர் பாலகிருஷ்ணன் கூறியதாவது:காய்கறி விலையேற்றத்துக்கு நேரடி மற்றும் மறைமுக காரணங்கள்

பல உள்ளன. கோவை புறநகர் பகுதிகளில் எண்ணற்ற விவசாய நிலங்கள் "லே-அவுட்'களாக மாறிவிட்டன. இருக்கும் நிலங்களிலும் விவசாயம் மேற்கொள்ள முடியாத வகையில் தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது; மழையும் பருவம் மாறி பொழிகிறது. இக்காரணங்களால், மார்க்கெட்டுக்கு உள்ளூர் காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது. வெளிமாநிலம், வெளிமாவட்டங்களில் இருந்து காய் கறி கொண்டு வரும் வாகனங்களின் வாடகையும் கூடிவிட்டது.

விவசாய முறையிலும் சீரற்ற நிலையே நிலவுகிறது. ஒரு காய்கறிக்கு மார்க்கெட்டில் கிராக்கி நிலவும்போது, அதே காய்கறியை அதிகளவில் விவசாயிகள் பயிரிடுகின்றனர். அவை ஒட்டுமொத்தமாக மார்க்கெட்டுக்கு வரும்போது, அந்த ஒரு காய்கறியின் விலை மட்டும் குறைகிறது. அதே வேளையில், மற்ற காய்கறிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, விலை உயருகிறது. மார்க்கெட் தேவைக்கு ஏற்ற உற்பத்தி முறையை விவசாயிகள் கடைபிடிப்பதில்லை. குறைந்த விலையில் காய்கறிகளை விற்பதற்காகவே "உழவர் சந்தை'களை தமிழக அரசு ஏற்படுத்தியது. ஆனால், ஆண்டு முழுவதும் விளைச்சல் இல்லாததால் விவசாயிகளில் பலரும் வியாபாரிகளாக மாறிவிட்டனர். அவர்கள், மார்க்கெட்டுக்கு வந்து காய்கறிகளை மொத்த விலைக்கு கொள்முதல் செய்து எடுத்துச் சென்று, உழவர் சந்தையில் கடை விரித்து விற்கின்றனர். இதனால், வெளி கடைகளில் விற்கப்படும் விலைக்கே, உழவர் சந்தையிலும் காய்கறிகள் விற்கப்படுகின்றன.

அனைத்து விதமான காய்கறிகளும் மார்க்கெட் தேவைக்கு ஏற்ப சீரான உற்பத்தியில் இருந்தால் மட்டுமே, சீரான விலையும் நிலவும். எனவே, உற்பத்தி முறையில் மாற்றங்களை அமல்படுத்த விவசாயிகள் முயற்சிக்க வேண்டும். அவர்களுக்கு தேவையான உதவி, விவசாய ஆலோசனைகளை தமிழக அரசு வழங்க வேண்டும். அப்போதுதான், காய்கறிகளின் விலையை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.இவ்வாறு, பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

மாநாட்டின்போது சிக்கல்கோவையில், உலகத்தமிழ் செம்மொழி மாநாடு வரும் ஜூன் 23- 27 வரை நடக்கவுள்ளது. இம்மாநாட்டில் பல லட்சம் மக்கள் பங்கேற்கவுள்ளனர். இவர்களுக்கான உணவுத்தேவையை நிறைவேற்ற ஓட்டல்களுக்கு பல ஆயிரம் "டன்' காய்கறிகள் குறிப்பிட்ட ஐந்து நாட்களில் தேவைப்படும். அதற்கேற்ப, வெளிமாநிலங்கள் மற்றும் அண்டை மாவட்டங்களில் இருந்து காய்கறிகளை அதிகளவில் கோவை மார்க்கெட்டுக்கு கொண்டு வந்தால் மட்டுமே, நிலைமையை சமாளிக்க முடியும். இல்லாவிடில், கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு, இன்னமும் விலை எகிறுவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளள்ளன. எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொள்வது நல்லது.- நமது நிருபர்-

**பொள்ளாச்சி சந்தையில் வாழை விலை உயர்வால் விற்பனை மந்தம்**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி சுற்றுப்பகுதியில், பயிரிடப்பட்டிருந்த வாழை மரங்கள் சேதமடைந்ததால், சந்தைக்கு வாழை ரத்து குறைந்துள்ளது. இதனால், விலை உயர்ந்துள்ளது.பொள்ளாச்சி சந்தையில் வாழைத்தாரில் தூத்துக்குடி சீசன் நடக்கிறது. தூத்துக்குடி, குளித்தலை, திருச்செந்தூர், கணியூர் மற்றும் பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளிலிருந்து பொள்ளாச்சி சந்தைக்கு வாழைத்தார் வரத்து உள்ளது. இங்கு வரும் வாழைத்தார்களில், 60 சதவீதம் கேரளப்பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது.இந்நிலையில், பொள்ளாச்சி சுற்றுப்பகுதியில் கடந்த மாதம் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. இதில், பல ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழை மரங்கள் சேதமடைந்தன.

இதுதவிர, தமிழகத்தின் பிற பகுதிகளிலும் மழைக்கு வாழை மரங்கள் சேதமடைந்தது. இதனால், தற்போது விளைச்சல் குறைந்து, சந்தைக்கு வரத்தும் குறைந்துள்ளது. வழக்கமாக, 10 ஆயிரம் வாழைத்தார் வரத்தாக இருக்கும் நேரத்தில் தற்போது இரண்டாயிரம் வாழைத்தார்கள் மட்டுமே வரத்தாக உள்ளது. இதில், கேரளாவுக்கு ஆயிரத்து 200 தார்கள் அனுப்பப்படுகின்றன. தூத்துக்குடி பகுதியிலிருந்து வாழைத்தார் வரத்து இல்லை. பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளில் ஒரு

சில இடங்களிலிருந்து மட்டுமே வாழைத்தார் வரத்தாக உள்ளது. வரத்து குறைந்துள்ளதால், அனைத்து ரக வாழைத்தார்களின் விலையும் உயர்ந்து வருகிறது. ஒரு மாதத்தில் பூவன் ரக வாழைத்தாரின் விலை 150 ரூபாய் உயர்ந்துள்ளது.

கடந்த மாதம் 200 ரூபாய்க்கு விற்ற பூவன் ரக வாழைத்தார் இந்த வாரம் 350 ரூபாய்க்கும், மோரிஸ் தாரின் விலை ஒரு மாதத்தில் 100 ரூபாய் உயர்ந்து 300 ரூபாய்க்கும், ரஸ்தாளி ரக வாழைத்தார் 350 ரூபாய்க்கும், கற்பூரவல்லி 250 ரூபாய்க்கும், செவ்வாழை 400 ரூபாய்க்கும், மோரிஸ் கிலோ 22 ரூபாய்க்கும் விற்பனையானது.

பொள்ளாச்சி காந்தி மார்க்கெட் வாழைத்தார் வியாபாரிகள் கூறியதாவது:பல இடங்களில், எதிர்பாராத வகையில் வாழை மரங்கள் சரிந்து விளைச்சல் பாதித்துள்ளது. இதனால், வரத்து குறைந்து விலை உயர்ந்து வருகிறது. விலை உயர்வால், விற்பனையும் மந்தமாகியுள்ளது. வழக்கத்தை விட 40 சதவீதம் விற்பனை சரிந்துள்ளது. இதனால், வியாபாரிகளும் பாதிப்புக் குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.ஒரு சில பகுதிகளில், விவசாயிகள் தற்போதுதான் வாழை பயிரிட துவங்கியுள்ளனர். இதனால், சந்தைக்கு வரத்து அதிகரிக்க மூன்று மாதங்கள் வரை ஆகும். வரும் வாரங்களில் வரத்து குறையும் வாய்ப்புள்ளதால், பூவன் ரக வாழைத்தாரின் விலை 500 ரூபாயை எட்டும் என எதிர்பார்க் கப்படுகிறது. இவ்வாறு, வியாபாரிகள் தெரிவித்தனர்.

**.உபாசி தேயிலை ஆராய்ச்சியாளருக்கு விருது**

வால்பாறை : உபாசி தேயிலை ஆராய்ச்சியாளருக்கு மத்திய அரசு விருது கிடைத்துள்ளது.வால்பாறையில் உபாசி தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் உள்ளது. அங்குள்ள 50 க்கும் மேற்பட்ட டீ எஸ்டேட்டுகளில் தேயிலை உற்பத்தி, பாதிப்பு மற்றும் நோயிலிருந்து காப்பாற்ற தேவையான ஆலோசனைகளை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் அவ்வப்போது எஸ்டேட் நிர்வாககளுக்கு அறிவுறுத்திவருகிறது.தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் சார்பில் ஆண்டு தோறும் சிறந்த அறிவில் ஆராய்ச்சியாளருக்கான விருது வழங்கப்பட்டு வருகிறது.

2009-10ம் ஆண்டிற்கான தமிழக அரசின் விருது 11 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் வால்பாறை உபாசி தேயிலை ஆராய்சி மையத்தில் பணிபுரியும் ஆராய்ச்சியாளர் ராஜ்குமார் என்பவருக்கு தேயிலை செடிகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு தன்மை குறித்த ஆய்வுக்காக வேளாண்மையியல் துறை சார்பில் அறிவியல் அறிஞர் விருது வழங்கப்பட்டுள்ளது.விருது பெற்ற ஆராய்ச்சியாளர் ராஜ்குமாரை, உபாசியில் பணிபுரியும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சக ஊழியர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகளின் தேவைக்கேற்ற தொழில்நுட்பம் : வேளாண் துறை செயலர் வலியுறுத்தல்**

கோவை : ""விவசாயிகளின் தேவைக்கேற்ப தொழில்நுட்பங்களை அவ்வப்போது மாற்றியமைக்க வேண்டும்; பயறு உற்பத்தியை பெருக்குவதற்கான புதிய வழிமுறைகளை கண்டறிய வேண்டும்,'' என்று தமிழக வேளாண் துறை செயலாளர் நந்த கி÷ஷார் பேசினார்.கோவை வேளாண் பல்கலையில் நடந்த அறிவியல் விஞ்ஞானிகள் மாநாட்டின் துவக்க விழாவில் நந்த கிஷோர் பேசியதாவது: உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளின் உடனடி தேவையை மையமாக கொண்ட ஆராய்ச்சிகளை விஞ்ஞானிகள் முடுக்கி விட வேண்டும். பயிர்களை தாக்கும் பூச்சிகளை குறைப்பது, விவசாயிகளின் வருமானத்தை பெருக்குவது, உணவு உற்பத்தியை பெருக்குவது ஆகிய பிரச்னைகளுக்கு, முக்கியத்துவம் தருவதாக ஆராய்ச்சிகள் அமைய வேண்டும். இந்த ஆண்டு தமிழகத்தின் அரிசி உற்பத்தி 50 லட்சம் டன்னில் இருந்து 72 லட்சம் டன் ஆக உயர்ந்துள்ளது. உற்பத்தித் திறன், விவசாயிகளை சென்றடைந்த தொழில்நுட்பங்கள் ஆகியவையே இதற்கு காரணம். உணவு உற்பத்தி பிரச்னைகளுக்கு தீர்வு காண, விவசாயிகளுக்கு இணக்கமான திட்டங்களை செயல்படுத்த வேண்டும். விவசாயம் சார்ந்த

தொழில்நுட்ப தகவல்கள், எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவையாக இருக்க வேண்டும். பயறு உற்பத்தியை பெருக்குவதில் கூடுதல் கவனம் தேவை. விவசாயிகளின் தேவைக்கேற்ப தொழில் நுட்பங்களை அவ்வப்போது மாற்றியமைக்க வேண்டும்.

உற்பத்தியை பெருக்குவதற்கான புதிய வழிமுறைகளை கண்டறிய வேண்டும். இவ்வாறு, நந்த கிஷோர் பேசினார்.வேளாண் ஆணையர் கோசலராமன் பேசுகையில், ""நம் உணவு உற்பத்தி இலக்கு 112 டன்கள். செம்மை நெல் சாகுபடி காரணமாக பயறுவகை பரப்பு அளவு அதிகரித்துள்ளது. 13 ஆயிரம் எக்டரில் பயறு வகை பயிரிடப்பட்டுள்ளது. மாவுப் பூச்சி தாக்குதல் பரவுவதை தடுக்க, பாதிக்கப்பட்ட பகுதிகளில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது," என்றார்.

தோட்டக்கலை இயக்குனர் சந்திரமோகன் பேசுகையில்,""எதிர்காலத்தில் வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்கான திட்டங்களை வடிவமைக்க வேண்டும். தக்காளி, வாழை உற்பத்தி, கடந்த காலங்களை விட உயர்ந்துள்ளது. மக்கள் அதிகளவில் பயன்படுத்தும் மிளகாய், வெங்காயம் உற்பத்தியை பெருக்க உதவும் தொழில்நுட்பங்களை மேம்படுத்த வேண்டும்," என்றார். கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி, பதிவாளர் சுப்பையன், வேளாண் முதன்மை பொறியாளர் சுப்ரமணியன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**."ஆளுக்கொரு மரம் வளர்த்தால் புவிவெப்பமாதலை தடுக்கலாம்'**

பேரூர் : ""புவிவெப்பமயமாதலை தடுக்க ஆளுக்கொரு மரம் வளர்க்க வேண்டும்," என, பிரேமலதா பேசினார்.மாதம்பட்டியில், தொண்டாமுத்தூர் தே.மு.தி.க., சட்டசபை தொகுதி பொறுப்பாளர் தங்கவேலுவின் புதுமனை புகுவிழா நடந்தது. புதுமனையை பிரேமலதா விஜயகாந்த் திறந்து வைத்தார். பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி பேசுகையில்,""புவியின் வெப்பம் நாளுக்கு, நாள் அதிகமாகிக் கொண்டே போகிறது. எதிர்காலத்தில் மனித குலத்துக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தும். அதிகரித்து வரும் வெப்பமயமாதலை தடுக்க அனைவரும் முன்வர வேண்டும். அனைவரும் ஆளுக்கொரு மரம் வளர்க்க வேண்டும்," என்றார். தொடர்ந்து, மாநில தொழிற்சங்க செயலாளர் முருகேசன், மாவட்ட செயலாளர் பாண்டியன், ஒன்றிய செயலாளர் தியாகராஜன், மாவட்ட பிரதிநிதி செல்வலிங்கம், நகர செயலாளர் துரைராஜன் உள்ளிட் டோர் மரக்கன்றுகளை வினியோகித்தனர்.

**வெங்காயம் விலை வீழ்ச்சி: கவலையில் விவசாயிகள்**

கூடலூர்: கூடலூரில் வெங்காயம் உற்பத்தியும் குறைந்து, விலையும் வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கூடலூரில் 200க்கும் மேற்பட்ட ஏக்கரில் வெங்காயம் பயிரிடப்பட்டிருந்தது. தேவையான நேரத்தில் மழை இல்லாததால் விளைச்சல் வெகுவாக குறைந்தது. விளைச்சல் குறைந்த நிலையில், மார்க்கெட்டில் விலை அதிகரிக்கவேண்டிய நிலையில் குறைவாக உள்ளது. கிலோ ஒன்றுக்கு எட்ட ரூபாய் முதல் பத்து ரூபாய் வரை விற்கப்படுகிறது. சென்ற இதே பருவத்தில் கிலோ 18 ரூபாயில் இருந்து 20 ரூபாய் வரை வெங்காயம் விற்பனையானது. அப்போது உற்பத்தியும் அதிகமாக இருந்தது. தற்போது உற்பத்தி குறைந்த நிலையில், விலையும் குறைந்துள்ளதால் விவசாயிகள் தாங்கள் செலவழித்த தொகையை கூட பெற முடியாத நிலையில் கவலையடைந்துள்ளனர்.

---

**விலையில் இறங்கு ¬முகம்: விவசாயிகளுக்கு சோகம் ஏல மையத்தின் தேக்கத்தால் தேயிலை கிடைத்தும் குழப்ப நிலை**

கோத்தகிரி : கோத்தகிரி பகுதியில் தேயிலை மகசூல் அதிகரித்துவரும் நிலையில், விலையில் கடும் சரிவு ஏற்பட்டு

வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டத்தின் முக்கிய விவசாய பயிரான பசுந்தேயிலைக்கு கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக 10 ரூபாய்க்கு (ஒரு கிலோ பசுந்தேயிலை) குறையாமல் விலை கிடைத்து வந்தது.இடுபொருட்களின் விலையேற்றம், தொழிலாளர்களின் கூலி உயர்வு மற்றும் தோட்ட பராமரிப்பு செலவு ஆகியவற்றுக்கு இந்த விலை போதுமானதாக இல்லை.இருப்பினும், விவசாயிகள் ஓரளவு ஆறுதல் அடைந்து தோட்டங்களை சிரமங்களுக்கு இடையே பராமரித்து வருகின்றனர்.இந்நிலையில், குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் தேக்கம் அடைந்ததால், விலை படிப்படியாக குறைய துவங்கியது. கடந்த வாரம் ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு 7 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை விலை வழங்கப்பட்டுள்ளது.

மகசூல் குறைந்திருந்த நேரத்திலேயே விலை குறைந்துள்ளதால், மகசூல் அதிகரிக்கும் போதும் மேலும் விலை சரிய வாய்ப்புள்ளதாக விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.பசுந்தேயிலை விலை வீழ்ச்சியால் தங்களது குடும்பங்களை பராமரிக்கவே முடியாமல் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகள், இனிவரும் நாட்களில் மழைப் பெய்யும் பட்சத்தில், தோட்டங்களுக்கு உரமிட்டு பராமரிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.இருப்பினும், வறட்சியில் வாடிய பெரும்பாலான தோட்டங்களில் தற்போது பசுந்தேயிலை துளிர்விட துவங்கியுள்ளதால், ஓரிரு வாரங்களில் பசுந்தேயிலை மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.அதே நேரத்தில் தொடர்ந்து விலை குறைந்து வருவதால், விவசாயிகளுக்கு கவலையை ஏற்பட்டுத்தியுள்ளது.

இது ஒருப்புறம் இருக்க, அடுத்த வாரம் பள்ளிகள் திறக்கப்பட உள்ள நிலையில், தங்களது குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்க முடியாமல் பெற்றோர்கள் திணறி வருகின்றனர்.
நீலகிரி மாவட்டத்தில் மற்ற பகுதிகளில் உள்ளதுபோல அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகள் கோத்தகிரி பகுதியில் இல்லை.  இப்பகுதி மக்களுக்கு முழுக்க தேயிலை விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. இதனை நம்பியுள்ள விவசாயிகளுக்கு நிரந்தர விலை கிடைத்தால் மட்டுமே அவர்களின் வாழ்க்கை வளம் பெறும்.

எனவே, மத்திய, மாநில அரசுகள் பசுந்தேயிலைக்கு கட்டுப்படியான விலை கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.மஞ்சூர்: மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் அதிகளவு தேயிலை தோட்டங்கள் உள்ளன. பல்லாயிரம் குடும்பங்கள் இங்கு விவசாய தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த வடகிழக்கு பருவமழைக்கு பின், இங்கு பனிப்பொழிவு நிலவியது. சில பகுதிகளில் கடும் வறட்சி நிலவியதால் தேயிலை செடிகள் கருகியது.  கடந்த ஜனவரி மாதம் முதல் தொடர்ந்து மழை பெய்யாததால் ஒதயிலை தோட்டங்களில் கடும் வறட்சி ஏற்பட்டது. கடந்த ஏப்ரல் மாதத்தில் ஒரு சில பகுதிகளில் மழை பெய்ததால் தேயிலை தோட்டத்திற்கு ஓரளவு தண்ணீர் கிடைத்தது. இதனால், இப்பகுதியில் ஒரளவு தேயிலை மகசூல் கிடைத்தது.  ஆனால், தேயிலைக்கு விலையில்லாத காரணத்தால், கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு தேயிலை வழங்கும் விவசாயிகள் போதிய பணம் கிடைக்காமல் கடும் அவதியடைந்து வருகின்றனர்.  இதே நிலை தொடர்ந்தால், வரும் நாட்களில் கடும் பொருளாதார சிக்கலில் விவசாய குடும்பங்கள் பாதிக்கும் நிலை உள்ளது.

**தேயிலைக்கு ஊடுபயிராக "பாகல்' கூடலூர் தேயிலைக்கு ஊடுபயிராக "பாகல்' கூடலூர் விவசாயிகளுக்கு லாபம்**

கூடலூர் : கூடலூர் தோட்டமூலா பகுதியில் தேயிலை தோட்டங்களில் ஊடுபயிராக பாகற்க்காய் விவசாயம்

மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் தேயிலை தோட்டங்களுக்கு மத்தியில் ஊடுபயிராக குறுமிளகு, இஞ்சி,காபி போன்ற பயிர்களும் விளைவிக்கப்படுகிறது. அதில் குறுமிளகு மட்டுமே அதிக லாபத்தை தரக்கூடிய ஊடுபயிராக இருந்தது. ஆனால், காலப்போக்கில் குறுமிளகு செடிகள் வாடல் நோயால் அழிவுற்றதால் இதன் விளைச்சல் குறைந்து வருகிறது. சதுப்பு நிலப்பகுதிகளில் குறுமிளகு விவசாயம் மேற்கொள்ள இயலாத நிலையில், கூடலூர் பகுதியிலுள்ள தேயிலை விவசாயிகள் தேயிலை தோட்டங்களில் காய்கறி விவசாயத்தை ஊடுபயிராக மேற்கொண்டுள்ளனர்.இதன் ஒரு பகுதியாக, கூடலூர் அருகே தோட்டமூலா பகுதியில் கத்தரி, பாவை, பஜ்ஜிமிளகாய், கோஸ் உள்ளிட்ட காய்கறி விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் தேயிலை தோட்டங்களில் ஊடுபயிராக பாகற்க்காய் விவசாயம் தற்போது களைகட்டி வருகிறது. தேயிலை தோட்டங்களில் பாகற்காய் செடிகள் நடவு செய்யப்பட்டு பந்தல்போடப்படுவதால் தேயிலை செடிகளுக்கு நிழல் கிடைத்து வருகிறது.இதனால், தேயிலையுடன் பாகற்க்காய் விவசாயமும் இப்பகுதி விவசாயிகளுக்கு லாபத்தை தருகிறது.

**எலுமிச்சை பழமும் தப்பவில்லை**

மதுரை: மதுரையில் அக்கினி நட்சத்திரம் சுட்டெரித்து கொண்டிருக்கும் நிலையில், குளிர்ச்சி தரும் எலுமிச்சை பழத்தின் விலை அதிகரித்துள்ளது.பெரும்பாலும் ஆந்திராவிலிருந்து மதுரைக்கு இப்பழம் கொண்டு வரப்படுகிறது. தற்போது அங்கு கோடை காரணமாக, உற்பத்தி பாதிக்கப் பட்டது. இதனால் புளியங்குளம், சங்கரன் கோவில் பகுதியிலிருந்து மதுரைக்கு கொண்டு வரப்படுகிறது. வரத்து குறைவதால், பழத்தின் விலை ஒரு மடங்கு அதிகரித்துள்ளது. கடந்த வாரம் மொத்த விற்பனையில், கிலோ 20 ரூபாய்க்கு விற்ற நிலையில்,நேற்று 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதனால் சில்லரை கடைகளில் ஒரு பழம் 2.50 ரூபாய்க்கும், 3ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

**மூலிகைப் பயிர்களுக்கு 75 சத வீத மானியம்**

கொட்டாம்பட்டி: ""கொட்டாம்பட்டி ஒன்றியத்தில் மூலிகைப் பயிர்கள் பயிரிடும் விவசாயிகளுக்கு 20 முதல் 75 சதவீதம் வரை மானியம் வழங்கப்படும் என,'' தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், "தேசிய மூலிகைப் பயிர்கள் திட்டத்தின் கீழ், மத்திய அரசு நிதி உதவியுடன் மூலிகைப்பயிர்களுக்கு 20 முதல் 75 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. சோற்றுக் கற்றாழை, வேம்பு, சிறியாநங்கை, துளசி உள்ளிட்ட மூலிகைப் பயிர்களுக்கு இந்த மானியம் வழங்கப்படும். எனவே, இவற்றை சாகுபடி செய்ய நினைக்கும் விவசாயிகள் நிலத்தின் பட்டா, சிட்டா, குடும்ப அட்டை நகல்கள் மற்றும் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் தோட்டக்கலை அலுவலரையோ, யூனியன் வங்கியையோ ஜுன் 30ம் தேதிக்குள் அணுகலாம்,' என்றார்.

**மாம்பழ விலை என்ன**

மதுரை: மதுரையில் மாம்பழ சீசன் களை கட் டுவதால், விலை சீராக உள்ளது.நேற்று ஒரு கிலோ சப்பட்டை மாம்பழம் 60 ரூபாய், இமாம்பசந்த் 80, காலாபாடி 50, காதர் 50, பாலாமணி 70, மல் கோவா 70 ரூபாய்க்கு விற்கப் பட்டது. ஆப்பிள் 110-130 ரூபாய், மாதுளை110, காபூல் மாதுளை 160, தில்குஷ் திராட்சை 50, பன்னீர் திராட்சை 50, சப் போட்டா 20, பப்பாளி 15, கிர்ணி 35, அன்னாசி 30, மலை வாழை ஒன்று 4.50, சாத்துக்குடி 40, மோரீஸ் வாழைப்பழம் 30, பேரிக்காய் 70, பிளம்ஸ் பழம் 80 ரூபாய்க்கு விற்கப்பட்டது.

**பருத்தி விலை குறைவு விவசாயிகள் கவலை**

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவி.,யில் பருத்தி விலை குறைவால் விவசாயிகள் கவலையடைந்துள் ளனர்.ஸ்ரீவி., பகுதியில் இரண்டு ஆண்டுகளாக சரி வர மழை பெய்யாததால் கண்மாய்கள் வறண்டு நிலத்தடி நீர் குறைந்துள் ளது. சில இடங்களில் கிணறுகளில் இருக்கும் குறைந்த அளவு தண்ணீரை நம்பி விவசாயிகள் ஜனவரி, பிப்ரவரியில் பருத்தி நடவு செய்தனர். தற்போது அறுவடை நடந்து வருகிறது. இரு மாதங்களுக்கு முன் குவிண்டாலுக்கு 3,600 ரூபாய் வரை கிடைத்தது. இதை நம்பி விவசாயிகளும் அதிக லாபம் கிடைக்கும் என காத்திருந்தினர். தற்போது குவிண்டாலுக்கு 2,600 ரூபாய் தான் கிடைக்கிறது.

இதுகுறித்து தேசிய விவசாய விழிப்புணர்வு சங்க மாவட்ட தலைவர் நாகராஜன் கூறியதாவது: பருத்தி விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மத்திய அரசு, பருத்தி ஏற்றுமதிக்கு விதித்துள்ள தடையை ரத்து செய்ய வேண்டும், என்றார்.

**விலைவாசி உயராத பொருட்கள் எதுவுமில்லை! ஒரு கிலோ துவரை 74 ரூபாயை தொட்டது**

திருப்பூர் : சமையலுக்கு தேவையான மளிகை பொருட்கள், காய்கறி, முட்டை உட்பட பூக்கள் மற்றும் தங்கம் விலையும் எக்குத்தப்பாய் உயர்ந்துள்ளது. அனைத்து விதமான பொருட்களுமே விலை உயர்ந் துள்ளன. நேற்றைய தினம் தங்கம் விலை பவுனுக்கு 280 ரூபாய் உயர்ந்துள்ளது. ஒரு கிலோ துவரம் பருப்பு 74 ரூபாயை தொட்டது.பீன்ஸ் விலை ஏற்றம்: போதிய மழையின்மை, அக்னி வெயிலால் காய்கறி வரத்து குறைவாக இருப்பதால், விலை உச்சத்திலேயே இருக் கிறது. கடந்த இரு வாரங்களாக, காய்கறி விலை அதிகரித்தே இருக் கிறது. நேற்றைய தினம், ஒரு கிலோ பீன்ஸ் 10 ரூபாய், தக்காளி நான்கு ரூபாய் விலை உயர்ந்துள்ளன.

காய்கறி வியாபாரி கார்த்தி சரவணன் கூறியதாவது:மழை குறைவாக இருப்பதாலும், வெயில் தொடர்வதாலும் காய்கறி வரத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. முகூர்த்த நாட்கள் இருப்பதாலும் விலை ஏற்றம் இருக்கிறது. நேற்று (நேற்று முன்தினம்) 28 ரூபாய்க்கு விற்ற பீன்ஸ், இன்று (நேற்று) 10 ரூபாய் உயர்ந்து, கிலோ 38 ரூபாய்க்கு விற்கிறது. தென்னம்பாளையம் மார்க்கெட்டில் தக்காளி கூடை 160 ரூபாய் வரை விற்கிறது.தக்காளி விலை கிலோவுக்கு நான்கு ரூபாய் அதிகரித்து 28 ரூபாய்; கத்தரி 18; உருளை 20; சேனை 32; பச்சை மிளகாய் உருண்டை 40, சம்பா 30; பாகல் ஐந்து ரூபாய் குறைந்து 20; புடலை 16; பீர்க்கன்காய் 28; காலிபிளவர் 25 முதல் 30 வரை; அரசாணி மற்றும் பூசணி 18 முதல் 20 வரை; கேரட் மற்றும் பீன்ஸ் 38; பெரிய வெங்காயம் 12; சின்ன வெங்காயம் 16; மேரக்காய் 30; கோஸ் 20; கொத்தமல்லி கட்டு 30; கீரை வகைகள் கட்டுகள் இரண்டு ரூபாய்; கறிவேப் பிலை கிலோ 25 ரூபாய் விற்கிறது, என்றார்.

மாற்றமின்றி முட்டை விலை: முட்டை வியாபாரி லோகநாதன் கூறுகையில்,""இரு வாரங்களுக்கு முன், முட்டை விலை அதிகரித்து வந்தது. வெயிலின் தாக்கத்தால் முட்டை உற்பத்தி குறைந்து, விற்பனையை பாதித்தது. சில நாட் களாக முட்டை விலையில் மாற்றம் ஏற்படவில்லை. கொள்முதல் விலையில் முட்டை ஒன்று 2.67 ரூபாய்; மொத்த விற்பனையில் 2.70; சில்ல ரையில் 3.00 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஜூன் மாத துவக்கத்திற்கு பின், முட்டை விற்பனை சூடுபிடிக்க வாய்ப்புள்ளது,'' என்றார்.

முகூர்த்த விற்பனை குறைவு: பூ வியாபாரிகள் சங்க செயலாளர் சக்திவேல் கூறுகையில், ""முகூர்த்த நாட் கள் என்பதால் பூக்களின் விலை அதிகரித்துள்ளது. அதிக முகூர்த்தங் கள் இல்லாததால், அதிக பூக்கள் விற்பனை இல்லை. மல்லிகை 120; கனகாம்பரம் 240; அரளி 50; பட்டுப்பூ 100; முல்லைப்பூ 200; ரோஸ் 120; செண்டுமல்லி 80; ஒரு தாமரைப்பூ ஐந்து ரூபாய்க்கு விற்கிறது,'' என்றார்.

பாசிப்பருப்பு, உளுந்து விலையும் உயர்வு: தினசரி மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் பாலசுப்ரமணியம் கூறுகையில், ""உளுந்தம் பருப்பு கிலோவுக்கு ஐந்து ரூபாய் மற்றும் பாசிப்பருப்பு கிலோவுக்கு ஆறு ரூபாய் விலை அதிகரித்துள்ளது. கிலோ அடிப்படையில் ஒவ்வொரு பொருட்களின் விலை: அஸ்கா 30 ரூபாய்; துவரம் பருப்பு 66 முதல் 74 வரை; பாசிப்பருப்பு 88 முதல் 92 வரை; வெள்ளை உளுந்து 77; கருப்பு உளுந்து 75; கொள்ளு 24; தட்டை பயறு 42; சுண்டல் கடலை 32; பாசிப் பயறு 77 முதல் 79 ரூபாய் வரை விற்கிறது. பருப்பு வகைகளை இருப்பு வைப்பதை அதிகப்படுத்துவதால், லோக்கல் மார்க்கெட்டுக்கு அதிகமாக வருவதில்லை; தொடர்ந்து விலை அதிகரிக்கும் சூழல் உருவாகியுள்ளது," என்றார்.

சமையல் ஆயில் விலை அதிகரிப்பு: சமையல் ஆயில் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், ""சமையல் எண்ணெய்களின் வரத்து குறைந்துள்ளதால், விலை ஏற்றம் உருவாகியுள்ளது. நல்லெண்ணெய் கிலோ 89 ரூபாய்; சூரியகாந்தி எண்ணெய் 58; ரீபன்ட் ஆயில் ஒரு ரூபாய் அதிகரித்து 85; கடலை எண்ணெய் ஒரு ரூபாய் அதிகரித்து 76; தேங்காய் எண்ணெய் இரண்டு ரூபாய் உயர்வடைந்து 62; விளக் கெண்ணெய் 85; பாமாயில் 44; நெய் 280 ரூபாய்க்கு விற்கிறது. வரத்து குறைவாக இருப்பதே, விலையேற்றத்திற்கு காரணமாக அமைந்துள்ளது," என்றார்.

தங்கம் விலை 280 ரூபாய் உயர்வு: தங்கத்தின் விலை ஒரே நாளில் பவுனுக்கு 280 ரூபாய் அதிகரித்து, பவுன் 14 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.தங்க நகை வியாபாரிகள் சங்க செயலாளர் விஜயராகவன் கூறியதாவது:

பவுன் ஒன்றுக்கு ஒரே நாளில் 280 ரூபாய் அதிகரித்துள்ளது. ரூபாயின் மதிப்பு குறைந்து டாலரின் மதிப்பு அதிகரித்ததும், சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை உயர்ந்ததும் விலையேற்றத்துக்கு காரணமாகியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை கிராம் 1,710 ரூபாய்; சனியன்று 1,705 ரூபாய் என மாற்றம் அடைந்தது. இன்று (நேற்று) கிராமிற்கு 35 ரூபாய் அதிகரித்து, 1,740 ரூபாய்க்கு விற்றது. பவுன் 13,920 ரூபாய்; வெள்ளி ஒரு கிராம் 31.50 ரூபாய்க்கும் விற்பனையானது, என்றார்.

**நல்ல விலை கிடைக்காததால் வெங்காய விவசாயிகள் சோகம்**

உடுமலை : தளி மற்றும் சுற்றுப் பகுதியில் சின்ன வெங்காயம் அறுவடை தீவிரமாக நடக்கிறது. வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைக்காததால், விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.உடுமலை, தளி பகுதி யில் விவசாயம் பிரதானத் தொழிலாக உள்ளது. இப்பகுதியில் காய்கறி பயிர்களும் அதிகளவு சாகுபடி செய்யப்படு கின்றன. கிணற்றுப் பாசனத்துக்கு ஆண்டு முழுவதும் சின்ன வெங் காயம் பயிரிடப்படுகிறது. 90 நாள் பயிரான வெங்காயம், தற்போது அறுவடை பணிகள் தீவிரமாக நடக்கின்றன. ஆனால், வெங்காயத் துக்கு நல்ல விலை கிடைக்காததால், இருப்பு வைத்து வருகின்றனர்.இதுகுறித்து விவசாயி கள் கூறியதாவது:

சின்ன வெங்காயம் சாகுபடிக்கு 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. 90 நாள் பயிரான சின்ன வெங்காயம் அறுவடை பணிகள் தீவிரமாக நடக்கின்றன. ஆனால், நல்ல விலை கிடைக்காத தால், சிலர் இருப்பு வைத்து வருகின்றனர். அதிக நாட்கள் சின்ன வெங்காயம் இருப்பு வைக்க முடியாத சூழ்நிலையால், சிலர் கிடைத்த விலைக்கு விற்று வருகின்றனர். தற்போது 10 முதல் 11 ரூபாய் வரை மட்டுமே விலை கிடைக்கிறது. நல்ல விலை கிடைக்காத தால், நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை நிலவுகிறது. இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**பருத்தியில் தத்துப்பூச்சி கட்டுப்பாடு**



பதிவு செய்த நாள் : மே 26,2010,00:00 IST

மாசிப்பட்டத்தில் பருத்தி சாகுபடி செய்துள்ள உழவர்களின் கவனத்திற்கு, உங்கள் பருத்தியில் தத்துப்பூச்சி தாக்குதல் ஏற்பட்டுள்ளதா என்று பயிரினை நன்கு கண்காணிக்க வேண்டும். சுமங்கலா, எம்.சி.யூ.5, எல்ஆர்ஏ 5166 போன்ற ரகங்களைப் பயிரிட்டுள்ளவர்கள் பயிரினை நன்கு கண்காணிக்க வேண்டும். எஸ்விபிஆர் 2 ரகம் தத்துப்பூச்சி தாக்குதல் ஏற்பட்டாலும் தாங்கி வளர வல்லது. எனவே எஸ்விபிஆர் 2 ரகப்பயிரில் தத்துப்பூச்சி விரைந்து பரவி பாதிப்பினை ஏற்படுத்தாது.

தத்துப்பூச்சிகள் இலையில் சாற்றினை உறிஞ்சும். அதனால் இலையில் சுருக்கங்கள், மேடுபள்ளங்கள் காணப்படும். மஞ்சள் நிறம் இலையின் ஓரங்களிலிருந்து பரவும். கருகலும் ஓரங்களிலிருந்து ஆரம்பித்து பரவும். பயிரின் வளர்ச்சி குன்றும். தாங்கள் பயிரிட்டுள்ள பருத்தியில் எஸ்விபிஆர் 2 தவிர குறிப்பாக எம்சியூ5, எல்ஆர்ஏ 5166 மற்றும் சுமங்கலா தத்துப்பூச்சியினால் பாதிக்கப்பட்டால் ஏக்கருக்கு 200 மில்லி டைமீதோயேட் அல்லது 200 மில்லி மீதைல் டெமட்டான் மருந்தினைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். இமிடாகுளோபிரிட் (வணிகப் பெயர்கள்: டாடாமிடா, கான்பிடார்) கைத்தெளிப்பான் என்றால் ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீர் தேவைப்படும். விசைத்தெளிப்பான் என்றால் ஏக்கருக்கு 60 லிட்டர் தண்ணீர் இளம் பயிருக்கு தேவைப்படும்.

சாண்டோவிட், இன்ட்ரான் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு அரை மில்லி வீதம் சேர்த்துக்கொள்ள வேண்டும். இது மருந்துக்கரைசல் இலைகளில் நன்கு படிய உதவும். மேலும் உழவர்கள் தங்களின் இதுபோன்ற பயிர் பாதுகாப்பு பிரச்னைகளுக்குத் தக்க ஆலோசனை பெற, பாதித்தபயிர் மாதிரியுடன் வேளாண்மை அலுவலர், தோட்டக்கலை அலுவலர், வேளாண்மைக் கல்லூரிகள், வேளாண் பல்கலைகக்கழகத்தின் ஆராய்ச்சி நிலையங்கள் குறிப்பாக ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள பருத்தி ஆராய்ச்சிநிலையம் வேளாண்மை பட்டதாரிகளின் வேளாண்மை மருத்துவ நிலையங்கள் (அக்ரி கிளினிக்) ஆகியவற்றை நேரில் அணுகி தக்க ஆலோசனை பெற்று முறையாக கடைபிடிக்குமாறு பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

டாக்டர் அ.ராமலிங்கம், பேராசிரியர் மற்றும் தலைவர்,பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125.

**கோடையில் கோழிகளுக்கு தண்ணீர் பராமரிப்பு**

பதிவு செய்த நாள் : மே 26,2010,00:00 IST



கோழிகள் தீவனம் இல்லாமல் பல நாட்களுக்கு உயிர்வாழும். ஆனால் தண்ணீர் இல்லாமல் அவற்றால் உயிர்வாழ முடியாது. கோழிகளைப் பொறுத்தமட்டில் தண்ணீர் இன்றியமையாப் பொருளாகும். கோடை காலங்களில் சுற்றுப்புற வெப்பத்தை குறைப்பதில் தண்ணீர் பெரும்பங்காற்றுகிறது.

வணிக அளவில் வளர்க்கப் படும் இறைச்சிக்கோழிகளுக்கு அவை உண்ணும் தீவனத்தைப் போல இரு மடங்கு தண்ணீர் தேவை. கோடையில் கோழிகளின் உடலிலிருந்து கூடுதலாக வெப்பம், அவை விடும் மூச்சுக் காற்றின் மூலமே வெளியேறுகிறது. பறவைகளைப் பொறுத்தமட்டில் வியர்வைச் சுரப்பிகள் இல்லாத காரணத்தால் கூடுதலாக உண்டாகும் உடல்வெப்பத்தை வியர்வை மூலம் வெளியேற்ற இயலாது. எனவே கோழிகளால் சுவாசக் காற்று மூலம்தான் உடல் சூட்டினை தணித்துக் கொள்ள முடியும். இதற்காக கோழிகளுக்கு பெருமளவு தண்ணீர் தேவைப் படுகிறது.

கோடையில் ஹீட் ஸ்ட்ரோக் எனப்படும் வெப்ப அயர்ச்சியைக் குறைக்க தகுந்த தண்ணீர் கொடுப்பதன் மூலம் குறைக்கலாம். இத்துடன் தாது உப்புக்களையும் போதிய அளவு சேர்த்துக் கொடுத்தால் வெப்ப அயர்ச்சி குறைபாட்டை நீக்குவதுடன் கோழிகளுக்கு தண்ணீர் குடிக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் தூண்டுகின்றன.

தண்ணீரில் நோய் உண்டாக்கும் கிருமிகளின் அளவைக் குறைக்க குளோரின் பவுடர், அயோடின் கலவைகள், ஹைட்ரஜன் பெர் ஆக்சைடு போன்றவற்றை பயன் படுத்தலாம். இதில் குறைந்த செல வில் குளோரின் வாயுவைப்பெற 1000 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் வரை பிளீச்சிங் பவுடரைப் பயன்படுத்தலாம். அயோடின் தயாரிப்புகளை 10 லிட்டருக்கு 1 மிலி வீதம் பயன்படுத்தலாம்.

தரமற்ற குடிநீர் கோழிக்கு ரத்தக்கழிச்சல், சால்மோனல்லோசிஸ், கோலி பேசில்லோசிஸ் போன்ற நோய் பாதிப்புகளை உண்டாக்குவதுடன் அவற்றின் உற்பத்தி திறனையும் குறையச் செய்கின்றன.

முட்டையிடும் கோழிகள் முட்டையிட்டவுடன் அதிக அளவு தண்ணீரைக் குடிக்கும். இரவு நேரங்களில் வெளிச்சத்துக்காகப் போடப்படும் விளக்குகளை அணைப்பதற்கு முன்னும், அதிக தண்ணீர் அருந்தும். இறைச்சிக் கோழிகளைப் பொறுத்தமட்டில் சூரிய ஒளி பட்டவுடன் அல்லது செயற்கையாக வெளிச்சம் அளித்தவுடன் அதிக அளவு தண்ணீர் குடிக்கும். எனவே கோடையின் வெப்பத் தாக்குதலை உணர்ந்து, தகுந்த அளவில், தரமுள்ள தண்ணீர்

கோழிகளுக்கு வழங்க வேண்டும்.

டாக்டர் வி.ராஜேந்திரன், உதவி இயக்குனர், கால்நடை பராமரிப்புத்துறை, 844/1, லான்டிஸ்பள்ளி வீதி, அண்ணாநகர், நத்தம்-624 401.

***அணைப்பகுதியில் மழை இல்லாததால் சிறுவாணி நீர்மட்டம் வேகமாக குறைகிறது கடைசி வால்வில் மட்டுமே தண்ணீர் உள்ளது***

*கோவை, மே.26–*

*சிறுவாணி அணையின் நீர்பிடிப்பு பகுதியில் மழை இல்லாததால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைகிறது. அணையின் கடைசி வால்வில் மட்டுமே தண்ணீர் உள்ளதால் வெளியேறும் நீரின் அழுத்தம் குறைந்து விட்டது.*

*குடிநீர் வினியோகம்*

*கோவை நகருக்கு சிறுவாணி மற்றும் பில்லூர் அணைகளில் இருந்து குடிநீர் கொண்டு வரப்படுகிறது. பில்லூர் அணையில் இருந்து நாள் ஒன்றுக்கு எடுக்கப்படும் 12 கோடி லிட்டர் குடிநீரில் $6\frac{1}{2}$ கோடி லிட்டர் கோவைக்கு கொண்டு வரப்பட்டு மாநகராட்சி கிழக்கு மற்றும் வடக்கு மண்டலங்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. மீதமுள்ள $5\frac{1}{2}$ கோடி லிட்டர் குடிநீர் புறநகர் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. சிறுவாணியில் தினமும் $8\frac{1}{2}$ கோடி லிட்டர் குடிநீர் எடுக்கப்படுகிறது. இதில் 7 கோடி லிட்டர் குடிநீர் மாநகராட்சி மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. மீதமுள்ள $1\frac{1}{2}$ கோடி லிட்டர் குடிநீர் வழியோர கிராமங்களுக்கு செல்கிறது.*

*கடைசி வால்வை நெருங்குகிறது*

*பில்லூர் அணையில் நேற்றைய நீர்மட்டம் 70 அடி ஆகும். இந்த அணையில் நீர்மட்டம் குறைந்தாலும் அதற்கு மேல் உள்ள அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு, நீர்மட்டம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு கீழ் இறங்காமல் பராமரிக்கப்படும். எனவே பில்லூர் அணை வினியோக பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை வர வாய்ப்பு இல்லை.*

*சிறுவாணி அணையின் நேற்றைய நீர்மட்டம் 868.30 மீட்டர் ஆகும். அணையில் 863 மீட்டர் வரை மட்டுமே குடிநீர் எடுக்கமுடியும். எனவே இன்னும் 5 மீட்டர் உயரத்திற்கே குடிநீர் உள்ளது. தினமும் $8\frac{1}{2}$ கோடி லிட்டர் குடிநீர் அணையில் இருந்து எடுப்பதால், அணையின் நீர்மட்டம் நாள் ஒன்றுக்கு 8 செ.மீ. முதல் 9 செ.மீ. வரைகீழ் இறங்குகிறது. அணையில் தற்போது மேலிருந்து கீழாக 3–வது வால்வு வழியாக தண்ணீர் எடுக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் இன்னும் ஒரு மீட்டர் குறைந்தால், கடைசி வால்வு வழியாக மட்டுமே குடிநீர் எடுக்க முடியும். அப்போது அணையில் இருந்து வால்வு வழியாக வெளியேறும் குடிநீரின் அழுத்தம் குறையும்போது, குடிநீரின் அளவும் வெகுவாக குறைந்து விடும்.*

*சிக்கனம்*

*அணைப்பகுதியில் மழை இல்லாததால் சிறுவாணி அணையின் நீர் ஆதாரங்கள் அனைத்தும் வரண்டு விட்டன. இதனால் நீர்மட்டம் வேகமாக குறைகிறது. எனவே இருக்கிற குடிநீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.*

## பருவமழை நன்கு இருக்கும் என மதிப்பீடு மஞ்சள் சாகுபடி பரப்பளவு 35 சதவீதம் உயர வாய்ப்பு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
மும்பை
மஞ்சள் விலை அதிகரித்து வரும் நிலையில், தென் மேற்கு பருவமழை சிறப்பாக இருக்கும் என்ற முன்னறிவிப்பு காரணமாக இந்திய விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் அதிக ஆர்வம் கொண்டுள்ளதாக தெரிகிறது. எனவே நடப்பு பருவத்தில் நம் நாட்டில் மஞ்சள் பயிரிடும் பரப்பளவு 35 சதவீதம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

65 லட்சம் மூட்டைகள்

இது குறித்து ஜே.ஆர்.ஜி. வெல்த் மேனேஜ்மெண்ட் நிறுவனத்தின் ஆய்வுப் பிரிவின் தலைவர் ஹரீஷ் கலிபெள்ளி கூறும்போது, "நடப்பு பருவத்தில், எதிர்பார்க்கும் அளவிற்கு பருவமழை இருக்கும் பட்சத்தில் மஞ்சள் உற்பத்தி 60 முதல் 65 லட்சம் மூட்டைகளாக இருக்கும். சென்ற ஆண்டில் 47 லட்சம் மூட்டைகள் உற்பத்தி ஆகியுள்ளது" என்று தெரிவித்தார். ஒரு மூட்டை என்பது 45 கிலோ மஞ்சளைக் கொண்டதாகும்.
நம் நாட்டில் பொதுவாக மஞ்சள் சாகுபடி பணிகள் மே மாதத்தின் இறுதி வாரத்தில் தொடங்கி, ஆகஸ்டு மாதம் வரை நீடிக்கும். அறுவடை ஜனவரி மாதத்திலிருந்து தொடங்கும். எனினும் நடப்பு ஆண்டில், தமிழகம், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிராக ஆகிய மாநிலங்களில் போதிய அளவு நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுள்ள விவசாயிகள், மே மாதம் முதல் வாரத்திலேயே சாகுபடி பணிகளைத் தொடங்கியுள்ளதாக தெரிகிறது.

இந்தியா முதலிடம்

மஞ்சள் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் பயன்பாட்டில் இந்தியா உலகிலேயே முதல் இடத்தில் உள்ளது. தென் மாநிலங்களில் ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகியவை மஞ்சள் உற்பத்தி மையங்களாக உள்ளன.
நறுமணப் பொருள்களுள் ஒன்றான மஞ்சள் மருத்துவ குணங்கள் நிரம்பியது. சமையலில் அதிக அளவில் பயன்படுத்தப்படும் மஞ்சள், பெயிண்ட் துறைக்கு முக்கிய மூலப்பொருளாக உள்ளது. இது, மஞ்சள் எண்ணெய் மற்றும் ஓலியோரெசின் என்ற மருந்துப் பொருள் தயாரிக்கவும் பயன்படுகிறது.

**கோத்தகிரி நேரு பூங்காவில் காய்கறி கண்காட்சிக்கான ஏற்பாடுகள் தீவிரம்**

கோத்தகிரி, மே.26–
கோத்தகிரி நேரு பூங்காவில் காய்கறி கண்காட்சிக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வரு கிறது.
நேரு பூங்கா
கோத்தகிரி காமராஜ் சதுக்கம் அருகே நேரு பூங்கா அமைந்துள்ளது. தோட்டக் கலை துறை பராமரிப்பின் கீழ் உள்ள இந்த நேரு பூங்கா 3½ ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.
பூங்காவில் ஜினியா, காலண் டூலா, பிட்டோனியா, பேன்சி, டேலியா, டார்ப், மேரி கோல்டு, பிரெஞ்ச் மேரி கோல்டு, கார்னேசன், கோழி கொண்டை பூ, பேர்டு ஆப் பேரடைஸ் உள்பட பல வண்ணங்களில் மலர்கள் பூத்து உள்ளன.
நடைபாதைகள்
பூங்காவின் மைய பகுதியில் வட்ட வடிவில் ரோஜா தோட்டம் அமைக்கப்பட்டு உள்ளது. சிவப்பு, ரோஸ், வெள்ளை, மஞ்சள் உள்பட 20–க்கும் மேற்பட்ட வண்ணங் களில் ரோஜாக்கள் பூத்து குலுங்குவது சுற்றுலா பயணி களை மகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. அழகிய புல்வெளிகள், சுற்றுலா பயணிகள் நடந்து செல்ல அழகிய நடைபாதைகள், சிறுவர் பூங்கா மற்றும் 20–க்கும் மேற்பட்ட வண்ணங்களில் பூத்து குலுங்கும் டேலியாக்கள் ஆகியவற்றை சுற்றுலா பயணி கள் ரசித்து செல்கின்றனர்.
கடந்த ஆண்டு நடைபெற்ற காய்கறி கண்காட்சியில் காய்கறிகளால் உருவாக்கப் பட்ட சேவல், டைனோசரஸ், கொக்கு, முதலை ஆகியவை சுற்றுலா பயணிகளை வெகு வாக கவர்ந்தது. அதே போல் மலர்களால் உருவாக்கப்பட்ட கப் அண்டு சாசர், ராட்சத குவளை ஆகியவையும் சிறந்த வரவேற்பை பெற்றது.
பல்வேறு அலங்காரங்கள்
இந்த ஆண்டு 3–வது முறை யாக காய்கறி கண்காட்சி வருகிற 29, 30–ந் தேதிகளில் கோத்தகிரி நேரு பூங்காவில் நடைபெற உள்ளது. இந்த ஆண்டும் காய்கறிகளினால் பல்வேறு அலங்காரங்கள் செய்யப்பட உள்ளன. காய்கறிகளால் மயில், குடை மிளகாய் கொண்டு ரங்கோலி கோலம் போன்றவை அமைக்கப்படுகிறது.
மேலும் நீலகிரியில் வாழும் ஆதிவாசி மக்களான தோடர் இன மக்கள் வசிக்கும் பராம்பரிய குடில் ஒன்று காய்கறிகளால் அமைக்கப்பட உள்ளது. மேலும் காய்கறி சிற்பங்கள், காய்கறிகளால் அலங்கார வளைவு போன்றவையும் உருவாக்கப் பட இருக்கி றது.இதற்கான ஏற்பாடுகளை தோட்டக்கலை துறையினர் மேற்கொண்டு உள்ளனர்.